தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903

Email. Commr.thoothukudi@tn.gov.in
Fax No.2320457

## அவசரக் கூட்டப்பொருள்

2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் தேதி திங்கள்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை–I பிரிவு எண் 3 (1)–ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 23.08.10 | 1 | இம்மாநகராட்சிக்கு 2010–2011ம் ஆண்டுக்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 27 பணிகளுக்கு ரூ 104.08 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை எண். அ2/1408/2010 நாள் 02–08–2010ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ரூ. 90.405 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 27 பணிகளை ரூ. 104.08 லட்சம் மதிப்பீட்டில் செய்யவும், கூடுதல் செலவினத் தொகை ரூ.13.675லட்சத்தினை பொது நிதியிலிருந்து செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br><br>இ1/6043/2010 | 180) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 2 | இம்மாநகராட்சிக்கு 2010–2011ம் ஆண்டுக்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கூடுதல் 2 பணிகளுக்கு ரூ 7.30 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை எண். அ2/1408/2010 நாள் 04–08–2010ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ரூ 6.00 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கூடுதல் 2 பணிகளை ரூ. 7.30 லட்சம் மதிப்பீட்டில் செய்யவும், கூடுதல் செலவினத் தொகை ரூ.1.30 லட்சத்தினை பொது நிதியிலிருந்து செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகினறது.<br><br>**குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br>இ1/6043/2010 | 181) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | 3. | இம்மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களின் வருகையினை கண்காணிக்கும் பொருட்டு Biometric Attendance System என்ற கருவி 12 எண்ணிக்கை வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ 720000/– (ரூபாய் ஏழு லட்சத்தி இருபதாயிரம் மட்டும்) வாங்கவும், வரிவசூலினை மேம்படுத்த முதல் கட்டமாக 10 எண்ணிக்கை கையடக்க கருவி வாங்க உத்தேச செலவினம் ரூ 6,50,000/– (ரூபாய் ஆறு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்றம் தனது தீர்மானம் எண் 73 மற்றும் 74 நாள் 19–04–2010ல் அனுமதி வழங்கி உள்ளது. தற்போது Biometric Attendance System மற்றும் கையடக்க வரி வசூல் கருவிகளை இயக்க ஏர் டெல் நிறுவனத்தின் 22 சிம் கார்டு மற்றும் இரண்டு 512 வேக நெட் இணைப்பும் தேவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 22 சிம்கார்டு மற்றும் 2 இணைப்புகளை பெற ஒரு முறை செலவினமாக ரூ 4200/– (22 கார்டுக்கு ரூ 2200/– மற்றும் இரண்டு இணைப்புக்கு ரூ 2000/–) மாதாந்திர செலவினமாக ரூ 7250/– (22 சிம்பார்டுக்கு ரூ 2750/– இரண்டு நெட் இணைப்புக்கு ரூ 4500/–) ஆகும். 22 ஏர்டெல் சிம்கார்டு மற்றும் 2 ஏர்டெல் நெட் இணைப்புகள் அமைக்கவும் மேற்கண்ட செலவினத் தொகைக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br><br>இ1/19405/2009 | 182) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 4. | இம்மாநகராட்சியில் T6215 L – Lipi Printer ஜுன் 2009ம் ஆண்டு நிறுவப்பட்டது. இது வரை சொத்துவரி, குடிநீர் கட்டணம், ஆகியவற்றிற்கான வரி கேட்பு, நிலுவை கேட்பு, கேட்பு அறிக்கை சொத்து வரிக்கான கையேடு அனைத்தும் 51 வார்டுகளுக்கும் எடுக்கப்பட்டது. மேற்படி பிரிண்டரில் உள்ள Sportet என்ற பகுதி உடைந்துவிட்டதால் நகல் எடுக்க இயலாத நிலையுள்ளது. மேற்படி பிரிண்டரை விநியோகம் செய்த HCL நிறுவனத்தின் அறிக்கையில் பிரிண்டரின் உடைந்த பாகங்கள் மாற்றித் தர இயலாது என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பிரிண்டருக்கான Sportet ஒரு ஜோடி மாற்றிப் பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ. 10000/– க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு**– மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ5/12736/10 | 183) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 5 | இம்மாநகராட்சியில் உள்ள சர்வரில் SYMATEC ANTI VIRUS-10-USERS (SERIAL NO. M 1065827563 மென் பொருள் செப்டம்பர் 2008ம் ஆண்டு HCL நிறுவனத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி SYMATEC ANTIVIRUS 10 USERS மென்பொருளுக்கான Virus definition காலாவதியாகிவிட்டதால் அவற்றினை கால நீட்டிப்பு செய்து SYMATEC ANTI VIRUS-10-USERS மென்பொருளுக்கான virus definition ஐ HCL நிறுவனத்தின் மூலம் புதுப்பிப்பதற்கும் இதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ 15000/–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ5/12737/10 | 184) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 6 | இம்மாநகராட்சியிலுள்ள கணிணி பிரிவு மற்றும் அலுவலக வசூல் மையத்தில்<br><br>1) 5 KVA ONLINE UPS FROM ULTRA POWER SOLUTION<br>2)5 KVA ONLINE UPS FROM AARGEE<br>ஆகிய UPS கள் முறையே நிறுவப்பட்டுள்ளது. ஆனால் அவற்றிற்கான உத்திரவாதக் காலம் முடிவடைந்துவிட்டதால் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்வதற்கும், அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ5/12978/2010 | 185) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 7. | இம்மாநகராட்சியிலுள்ள கணிணி பிரிவு மற்றும் அலுவலக வசூல் மையத்தில் (1) Voltas -2 (2) L.G. 2 ஆகிய 4 AC கள் முறையே நிறுவப்பட்டுள்ளது. ஆனால் அவற்றிற்கான வருடாந்திர பராமரிப்பு காலம் முடிவடைந்துவிட்டதால் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்வதற்கும், அதற்கு ஆகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br><br>இ5/12979/2010 | 186) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 8. | இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் வயர்மேன் ஆக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30–06–2010அன்று ஓய்வு பெற்ற திரு. கே. போத்திராஜ் என்பவருக்கு அன்னார் பணி ஆற்றிய காலத்தில் பிடிதரம் செய்யப்பட்ட சிறப்பு சேம நலநிதித் சந்தா தொகை ரூ 2960 வட்டி ரூ 7034 மான்யம் ரூ 10000 மொத்தம் ரூபாய் 19994/–ஐ (ரூபாய் பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து தொன்னூற்றி நான்கு மட்டும்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு–** அனுமதிக்கலாம்<br><br>இ2/7358/2010 | 187) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 9. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் தெரு ஓரத்தில் வீடு இல்லாமல் வசிப்பவர்கள் பற்றிய தகவல்கள், கலர் புகைப்படங்கள் மற்றும் அவர்களைப் பற்றிய புள்ளி விவரங்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைப்பதற்காக அறிக்கை தயார் செய்ய கலர் ஜெராக்ஸ் நகல் எடுப்பதற்கு ஆணையரின் அனுமதி பெறப்பட்டது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான செலவு தொகை ரூ 3695/—ஐ அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு** – 1. அனுமதிக்கலாம்.<br><br>2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>எச்4/12056/200 | 188) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது. |
| | 10 | இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவின் மூலம், இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் திருநெல்வேலி சங்கர் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைப்பதற்காக தேவைப்படும் உபயோகப்படுத்தப்பட்ட உரச்சாக்குகளால் தைக்கப்பட்ட போரோ, 50 எண்ணம் வாங்குவதற்கு ஆணையரின் அனுமதி பெறப்பட்டது. அதன்படி மூன்று நபர்களிடமிருந்து கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் 'எஸ் ராதா கிருஷ்ணன்' ஜீவா காலனி, தூத்துக்குடி என்பவர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளார். ஆகவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அவரிடமிருந்து அவசர அவசியம் கருதி, வாங்கி கொள்ளவும் அதற்கான செலவுத் தொகை ரூ 3500/—ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1) எஸ். ராதாகிருஷ்ணன், ஜீவா காலனி, தூத்துக்குடி ரூ. 3500/—<br><br>2) எஸ். மாரியப்பன் 31/சி பிள்ளையார் கோவில் தெரு, தூத்துக்குடி ரூ. 4000/—<br><br>3) எம். ரமேஷ் 1709/எச். ஸ்டேட் பாங்க் காலனி தூத்துக்குடி. 4750/—<br><br>**குறிப்பு** 1) அனுமதிக்கலாம்<br><br>2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>எச்4.12867/2007 | 189) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 11 | இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் வாகன ஓட்டுநராக பணிபுரியும் திரு. எல். ராமநாதன் என்பவர் தனது தாய் தந்தையர் காயல்பட்டிணத்தில் குடியிருந்து வருகின்றனர் என்றும் தனது தாயாரின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டு எழுந்து நடமாட முடியாத நிலையில் உள்ளார் என்றும் தனது வயதான தாய் தந்தையரை பாதுகாக்க தனது மனைவி குழந்தைகளை மேற்படியார்களுக்கு உதவியாக காயல்பட்டினத்தில் குடியமர்த்தி உள்ளதால் தனது குடும்ப சூழ்நிலை மிக கஷ்டமாக உள்ளது மன உளச்சலும் ஏற்படுகிறது என்றும் காயல்பட்டிணம் 3ம் நிலை நகராட்சியில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடத்திற்கு பணியிடம் மாறுதல் வழங்கிட கோரியுள்ள விண்ணப்பத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். எச்1. 13528/2010 | 190) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | 12 | இம்மாநகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திரு. பி.ஜோதிமணி என்பவர் இம்மாநகராட்சியில் 2004–2005 மற்றும் 2005–2006ல் எடுத்து செய்யப்பட்ட பணிக்காக பில்லில் முன் வைப்புத் தொகையாக பிடித்தம் செய்யப்பட்ட ரூபாய் 66198/–ஐ திரும்ப வழங்க கேட்டு உள்ளார். மேற்படி தொகை ரூ. 66198/–ஐ காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூபாய் 66198/–ஐ திரும்ப வழங்க மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.10735/10/பி3 | 191) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| **30.08.10** அவசரக் கூட்டம் | 1 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் தற்போது பாதாள சாக்கடை திட்ட பணியில் குழாய்கள் அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இதனால் தற்போது மாநகராட்சி எல்லைக்குள் அனைத்து சாலைகளும், பாதாள சாக்கடைதிட்டத்திற்கு குழாய்கள் பதிப்பதற்காக தோண்டப்பட்டசாலைகளும், மற்றும் மழையினால் பழுதடைந்த நிலையில் உள்ள சாலைகளும் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை.<br><br>எனவே பழுதடைந்த மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு தோண்டப்பட்ட சாலைகளை சீரமைக்க கோரி பொது மக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்து தொடர்ந்து புகார்கள் வரப்பெற்றமையால் இது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழியாக அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.<br><br>அதன்பேரில் தூத்துக்குடி மாநகராட்சியில் சிறப்பு சாலை திட்டம் 2010–2011 இன் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் கடிதம் எண்25910/2010/இ3, நாள்06.08.2010 இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் பேரில் மாநகர பகுதியில் பழுதடைந்த மற்றும் சேதமடைந்த சாலைகளை தள ஆய்வு செய்து சரியாக அளவீடு செய்து அதில் மிக முக்கிய சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுத்து சரியான மதிப்பீடு தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டது.<br><br>அதன் அடிப்படையில் பின் வரும் பட்டியலில் கண்டுள்ள சாலைகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது, அதன் மதிப்பீடு தொகை ரூ3271.90/– இலட்சம் | 192) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

ஆகும் . மேற்படி மதிப்பீடு தொகையினை சிறப்பு சாலை திட்டம் 2010–2011 இன் கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்ய தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்கள் மூலமாக அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | சாலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கிருஷ்ணராஜபுரம் 9 வது தெரு முதல் மாணிக்கபுரம் மெயின் ரோடு பிரதான சாலை வரை தார் சாலை அமைக்கும் பணி | 66.00 |
| 2 | இஞ்ஞாசியார்புரம் ரோடு (அமெரிக்கன் ஆஸ்பத்திரி ரவுன்டானா சந்திப்பில் இருந்து செயின்ட் தாமஸ் உயர் நிலை பள்ளி வரை) தார் சாலை அமைக்கும் பணி | 18.70 |
| 3 | சேதுபாதை மெயின் சாலையில் தார் சாலை அமைக்கும் பணி | 42.50 |
| 4 | ஆண்டாள் தெரு ( 2ஆம் கேட் முதல் 3 ஆம் கேட் வரை) சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 113.60 |
| 5 | கணேஷ் நகர் மெயின் சாலை (தார் சாலை அமைக்கும் பணி) | 22.25 |
| 6 | கணேஷ் நகர் குறுக்கு தெரு பகுதிகள் (தார் சாலை அமைக்கும் பணி) | 24.00 |
| 7 | 4 வது ரயில்வே கேட் முதல் எட்டையபுரம் ரோடு சந்திப்பு வரை உள்ள குறிஞ்சி நகர் மெயின் சாலையில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 64.00 |
| 8 | பிரையண்ட் நகர் மேற்கு மற்றும் கிழக்கு மெயின் சாலை, பிரையண்ட் நகர் 12 வது தெரு, மற்றும் பிரையண்ட் நகர் 1 வது தெரு முதல் காமராஜ் சாலை வரை தார் சாலை அமைக்கும் பணி | 211.00 |
| 9 | கிருஷ்ணராஜபுரம் மெயின் சாலையில் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 72.50 |
| 10 | சிவந்தா குளம் மெயின் சாலை (வடக்கில் இருந்து தெற்கு) ஹோலி கிராஸ் கான்வென்ட் பள்ளி மேல்பக்கம் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 40.00 |
| 11 | தாமோதர நகர் மெயின் ரோடு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 48.00 |
| 12 | கந்தசாமிபுரம் மெயின் சாலை (அமெரிக்கன் ஆஸ்பத்திரி ரவுன்டானா சந்திப்பில் இருந்து எஸ்.கே.எஸ்.ஆர். காலனி வரை) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 42.50 |
| 13 | செல்வநாயகபுரம் மெயின் சாலை ( கருத்தபாலம் முதல் எஸ்.கே.எஸ்.ஆர். காலனி வரை ) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 43.75 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 14 | போல்பேட்டை 60 அடி ரோடு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 62.75 | |
| | | 15 | ஸ்டேட் பாங்க் காலனி சக்தி விநாயக புரம் குறுக்கு தெரு தார் சாலை அமைக்கும் பணி | 37.00 | |
| | | 16 | திரேஸ்புரம் மெயின் ரோடு,பூபாலராயர்புரம் மெயின் ரோடு சந்திப்பு வரை தார் சாலை அமைக்கும் பணி | 32.75 | |
| | | 17 | பூபாலராயர் புரம் மெயின் ரோடு (சத்யா மஹால் முதல் முருகன் தியேட்டர் வரை) தார் சாலை அமைக்கும் பணி | 31.00 | |
| | | 18 | திரேஸ்புரம் மெயின் ரோடு,(ஜோசப் பள்ளி முதல் மேட்டுபட்டி கிழக்கு பகுதி வரை) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 40.50 | |
| | | 19 | வடக்கு ராஜா தெருவில் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 21.50 | |
| | | 20 | டேவிஸ்புரம் கிழக்கு மற்றும் மேற்கு மெயின் ரோடு முதல் கருப்பட்டி செசைட்டி சந்திப்பு வரை தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 79.00 | |
| | | 21 | வி.இ.ரோடு மற்றும் தேவர்புரம் ரோடு வரை(காய்கறி மார்கெட் சந்திப்பு ) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 110.00 | |
| | | 22 | போல்டன்புரம் மெயின் ரோடு முதல் நியூகாலனி மெயின் ரோடு வரை (கே.எஸ்.பி.எஸ் தியேட்டர் சாலை) தார் சாலை அமைக்கும் பணி | 49.00 | |
| | | 23 | போல்டன்புரம் மற்றும் ராமசாமி புரம் தெருவில் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 58.50 | |
| | | 24 | மணிநகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 34.40 | |
| | | 25 | முனியசாமிபுரம் 2ஆம் தெரு மற்றும் மேற்குபகுதி தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 32.50 | |
| | | 26 | தந்தி ஆபீஸ் ரோடு மற்றும் ஜெயிலாணி தெரு தொடர்ச்சி(காரணேசன் தியேட்டர் சாலை) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 33.50 | |
| | | 27 | பக்கிள் புரம் தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 4.60 | |
| | | 28 | டூவிபுரம் 5 வது தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 18.50 | |
| | | 29 | லெவிஞ்சிபுரம் 2 வது தெரு மற்றும் சிவந்தாகுளம் தொடர்ச்சி பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 19.70 | |
| | | 30 | குறிஞ்சிநகர் (கலைஞர் அரங்கம் பின்புறம்) பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 13.00 | |
| | | 31 | மீனாட்சிபுரம் மெயின் ரோடு தார் சாலை அமைக்கும் பணி | 8.60 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 32 | பெருமாள்புரம் தெருவில் (சுப்பையா வித்யாலயம் பெண்கள் பள்ளி) தார் சாலை அமைக்கும் பணி | 17.10 | |
| | | 33 | அண்ணா நகர் மேற்கு 8,9,10 தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 30.00 | |
| | | 34 | அண்ணா நகர் 1 முதல் 11 வரை மற்றும் அண்ணாநகர் 1,2,3,குறுக்கு தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 133.00 | |
| | | 35 | மங்களபுரம் குறுக்கு தெரு மற்றும் அண்ணாநகர் 12 வது தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 22.00 | |
| | | 36 | கே.வி.கே.நகர் மேற்கு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 21.50 | |
| | | 37 | ஸ்டேட் பாங்க் காலனி மெயின் ரோடு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 31.50 | |
| | | 38 | வண்ணார் தெரு மற்றும் தாமோதர நகர் குறுக்கு தெரு தார் சாலை அமைக்கும் பணி | 20.50 | |
| | | 39 | கீழ சண்முகபுரம் 2 வது தெரு வடக்கு ,சிமெண்ட் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 4.60 | |
| | | 40 | கீழசண்முகபுரம் பத்திரகாளிஅம்மன்கோவில் சுற்றி ,சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 3.90 | |
| | | 41 | சந்திவிநாயகர் கோவில் தெரு, மற்றும் சந்து சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 4.40 | |
| | | 42 | முத்து தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 7.35 | |
| | | 43 | கருப்பசாமி கோவில் தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 2.30 | |
| | | 44 | நம்பிக்கை ரோச் விளை தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 1.55 | |
| | | 45 | பிரமுத்து விளை மற்றும் பத்திரகாளிஅம்மன் கோவில் தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 6.10 | |
| | | 46 | பார்த்தசாரதி குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 3.85 | |
| | | 47 | மீ.கா. தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 2.60 | |
| | | 48 | டி.ஆர். தெரு (பங்களா தெரு) சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 6.70 | |
| | | 49 | ஸ்டேட் பாங்க் காலனி, நடராஜநகர் மற்றும் குறுக்கு தெரு தார் சாலை அமைக்கும் பணி | 28.00 | |
| | | 50 | பிரையண்ட் அம்மன் கோவில் தெரு தார் சாலை அமைக்கும் பணி | 17.50 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 51 | அழகேசபுரம் முதல் திரேஸ்புரம் வரை (பக்கிள் ஓடை அணுகு சாலை) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 177.00 | |
| | | 52 | சுப்பையாபுரம் மற்றும் மாசிலாமணிபுரம் தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 103.00 | |
| | | 53 | டி.எம்.சி.காலனி செல்வநாயகபுரம் மற்றும் போல்பேட்டை கிழக்கு குறுக்கு தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 19.50 | |
| | | 54 | நியூகாலனி மற்றும் சிவந்தா குளம் பகுதி தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 77.50 | |
| | | 55 | காளியப்பர் பிள்ளை தெரு தார் சாலை அமைக்கும் பணி | 8.50 | |
| | | 56 | சந்தை ரோடு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 18.50 | |
| | | 57 | பூபாலராயர்புரம் 1 மற்றும் 2 தெரு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 25.90 | |
| | | 58 | டூவிபுரம் 2 வது தெரு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 15.00 | |
| | | 59 | சுந்தரவேல்புரம் 6,7,8,வது தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 18.00 | |
| | | 60 | போல்பேட்டை மேற்கு 2 வது தெரு மற்றும் குறுக்கு தெரு(புதிய பேரூந்து நிலையம் அணுகு சாலை) தார் சாலை அமைக்கும் பணி | 34.50 | |
| | | 61 | பிரையண்ட் நகர் 1,2 மற்றும் 4,5 தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 75.90 | |
| | | 62 | சுந்தரவேல்புரம் மேற்கு (அம்பேத்கர் நகர் குறுக்கு தெரு) தார் சாலை அமைக்கும் பணி | 26.40 | |
| | | 63 | திரேஸ்புரம் (உடைமர தெரு) தார் சாலை அமைக்கும் பணி | 5.00 | |
| | | 64 | நாராயணன் செட்டி தெரு தார் சாலை அமைக்கும் பணி | 9.00 | |
| | | 65 | டூவிபுரம் 4,10,மற்றும் 11 ஆம் தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 27.00 | |
| | | 66 | பூபாலராயர்புரம் 1 முதல் 5 தெரு மற்றும் வெற்றிவேல்புரம் குறுக்கு தெரு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 58.50 | |
| | | 67 | டூவிபுரம் மெயின் ரோடு (ராஜ் தியேட்டர் எதிர்புறம்) தார் சாலை அமைக்கும் பணி | 14.70 | |
| | | 68 | பிரையண்ட் நகர் 12 வது தெரு தொடர்ச்சி மற்றும் 8, 9, 10 ஆம் தெரு மேற்கு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 25.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 69 | கிருஷ்ணராஜபுரம் 1 முதல் 8 தெரு குறுக்கு தெரு தார் சாலை அமைக்கும் பணி | 63.10 | |
| | | 70 | அழகேசபுரம் முதல் தெருவில் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 11.20 | |
| | | 71 | மில்லர்புரம் மெயின் ரோடு தார் சாலை அமைக்கும் பணி | 21.30 | |
| | | 72 | தெற்குபுது தெரு தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 14.00 | |
| | | 73 | வி.எம்.கோவில் தெரு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 16.00 | |
| | | 74 | பொன்னகரம் (முனியசாமி கோவில் தெரு முதல் முத்து கிருண்ணாபுரம் வரை ) தார் சாலை அமைக்கும் பணி | 14.70 | |
| | | 75 | தட்டார் தெருவில் தார் சாலை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 9.50 | |
| | | 76 | கோபால்சாமிதெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 3.40 | |
| | | 77 | திரேஸ்புரம் 1 மற்றும் 2 குறுக்கு தெரு, கடற்கரை மெயின் சாலை | 16.45 | |
| | | 78 | பாலவினாயகர் கோவில் தெரு தார் சாலை அமைக்கும் பணி | 29.50 | |
| | | 79 | முத்து கிருஷ்ணாபுரம் 6 வது தெருவில் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 66.25 | |
| | | 80 | அழகேசபுரம் மெயின்ரோடு தார் சாலை மேம்பாடு செய்தல் | 16.45 | |
| | | 81 | மேட்டுப்பட்டி மெயின் ரோடு தார் சாலை அமைக்கும் பணி | 8.50 | |
| | | 82 | திரேஸ்புரம் (ஜோசப் பள்ளி சாலை) தார் சாலை அமைக்கும் பணி | 10.00 | |
| | | 83 | சுந்தரவேல்புரம் மேற்கு (சத்யா நகர் 1மற்றும் 2 வது குறுக்கு தெரு) தார் சாலை அமைக்கும் பணி | 26.35 | |
| | | 84 | சிதம்பரநகர் 3,4,5,மற்றும் 6வது தெரு,மத்தி தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 28.80 | |
| | | 85 | பி & டி. காலனி 2 வது தெரு தார் சாலை அமைக்கும் பணி | 6.50 | |
| | | 86 | போல்பேட்டை மேற்கு 1,3,4,5 குறுக்கு தெரு மற்றும் குறிஞ்சி நகர் 5 வது தெரு முதல் எட்டையபுரம் ரோடு மெயின் சாலை வரை தார் சாலை அமைக்கும் பணி | 16.55 | |
| | | 87 | ஆசிரியர் காலனி 3 வது தெரு தார் சாலை அமைக்கும் பணி | 5.20 | |
| | | 88 | நந்தகோபாலபுரம் மெயின் ரோடு தார் சாலை அமைக்கும் பணி | 38.50 | |

| | | |
|---|---|---|
| 89 | லயன்ஸ் டவுண் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 10.40 |
| 90 | காந்திநகர் 2 வது மற்றும் 3 வது தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 6.80 |
| 91 | குறிஞ்சிநகர் 7 வது தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 7.60 |
| 92 | குறிஞ்சிநகர் 2,3,4, மற்றும் 5 வது குறுக்கு தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 29.00 |
| 93 | ஜார்ஜ்ரோடு தொடர்ச்சி(இந்திராநகர் மெயின் ரோடு) தார் சாலை அமைக்கும் பணி | 4.50 |
| 94 | பாத்திமாநகர் 1,2,மற்றும் 3 தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி | 5.00 |
| 95 | சுந்தரராமபுரம் 1,2,3 மற்றும் 4 குறுக்கு தெருக்களில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 18.50 |
| 96 | அழகேசபுரம் குறுக்கு தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 7.00 |
| 97 | எஸ்.எஸ்.தெரு மார்கெட் முதல் முத்துகிருஷ்ணாபுரம் வரை தார் சாலை அமைக்கும் பணி | 14.40 |
| 98 | தெற்குகாட்டன் ரோடு மற்றும் தெற்கு காட்டன் ரோடு தொடர்ச்சி பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 24.00 |
| 99 | சத்திரம் தெரு முதல் கடற்கரை சாலை வரை( 2ஆம்கேட் முதல் கால்டுவெல் பள்ளி வரை) தார் சாலை அமைக்கும் பணி | 116.50 |
| 100 | போல்பேட்டை மெயின் ரோடு ஸ்டேட் பாங்க் காலனி 60 அடி ரோடு வரை தார் சாலை அமைக்கும் பணி | 7.00 |

<u>அ.கு :</u> மேற்கண்ட சாலை பணிகள் சிறப்பு சாலை திட்டம் 2010–2011 ன் கீழ் முழு மானியம் பெற்று செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் ,சென்னை அவர்கள் மூலமாக அரசுக்கு பரிந்துரை செய்யலாம்

இ1/13507/2010

| | | | |
|---|---|---|---|
| | 2. | இம்மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் 250 KVA டீசல் ஜெனரேட்டர் விநியோகம் செய்யும் பணிக்கு 12வது நிதிக் குழுவில் ரூபாய் 25,00,000/–க்கு நிதி ஒதுக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி பணிக்கு தொழில் நுட்ப அனுமதி இம்மாநகராட்சி செயற் பொறியர் அவர்கள் நாள் 21–5–2010 வழங்கியுள்ளார்.<br><br>மேற்கண்ட பணிக்கு 24–5–2010 அன்று 'E' Tender மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 11–6–2010ம் தேதி மாலை 3.00 மணி வரை இரண்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.<br><br>அதன்படி மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட தொழில் நுட்ப உறை Local tender evaluation committee க்கு 11–6–2010 அன்று மாலை 4.00 அளவில் பொருள் வைக்கப்பட்டது. | 193) அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டன.<br>1) திரு எஸ்.சுதர்சன் குருஸ்புரம்<br>2) திரு எஸ். ரம்போலா குருஸ்புரம்<br><br>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி price bid திறக்க சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறிவிப்பு அனுப்பி 23–7–2010 அன்று ஒப்பந்தக்காரர் முன் வைத்து திறக்கப்பட்டது. இதில் திரு எஸ். சுதர்சன் ஒப்பந்தக்காரர் ரூ 2094490/–க்கு மதிப்பீட்டை விட 4.96 சதவிகிதத்திற்கு கூடுதலாகவும் திரு எஸ். ரம்போலா அவர்கள் ரூ 2108480/–க்கு மதிப்பீட்டை விட 5.67 சதவிகிதம் கூடுதலாக கொடுத்துள்ளனர்.<br><br>இதில் குறைந்த Price Bid வழங்கிட திரு எஸ். சுதர்சன் என்பவருக்கு விலை குறைப்பு கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. திரு எஸ். சுதர்சன் என்பவர் 27–7–2010ம் தேதிய கடிதத்தில் குறைப்பு கடிதம் சமர்ப்பித்துள்ளார். அதன்படி திரு எஸ். சுதர்சன் என்பவர் மதிப்பீட்டை விட 0.05 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ளார். எனவே மதிப்பீட்டை விட 0.05சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு எஸ். சுதர்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி (Price Bid ) தொகையை ஏற்க மாமன்றத்தி அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட 0.05 சதவிகிதம் (ரூ. 1994422) க்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி திரு எஸ். சுதர்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகையினை ஏற்றுக்கொள்ளலாம்.<br><br>இ1/4812/2009 | |
| | 3. | இம்மாநகராட்சி தெரு விளக்கு பராமரிப்பிற்கான ஸ்கை லிப்ட் ஏணியுடன்கூடிய வாகனம் 4500MM wheel Base க்கு ரூ 6,55,000 என ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மாமன்ற தீர்மான எண். 136/10 26–05–2010ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி ஆணை மெசர்ஸ் TVS நிறுவனம் மதுரைக்கு வழங்கப்பட்டது.<br><br>மெசர்ஸ் TVS நிறுவனம் மதுரை மேற்படி வாகனம் DGST விலை வகிதத்தில் தற்போது இல்லை என்றும் ரூ 785993 என விலை விகிதம் மாரி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.<br><br>மேலும் தற்போது தெருவிளக்கு பராமரிப்பிற்குரிய தெருக்களில் மற்றும் சந்துகளில் செல்வதற்கு 3500 MM wheel Base போதுமானது ஆகும். இதற்கு அரசு சலுகை விலையில் ரூ 705000 க்கு மெசர்ஸ் அசோக் TVS நிறுவனம் மதுரை விலைப்புள்ளி கொடுத்துள்ளனர்.<br><br>திட்டப் பணியாக இருப்பதாலும் ரூ 705000க்கு அரசு சலுகை விலையில் மெசர்ஸ் TVS நிறுவனம் மதுரை வழங்கியதை ஏற்று ஒப்புதல் அளிக்கவும் கூடுதல் செலவினத்தை பொது நிதியில் இருந்து வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>**அலுவலக குறிப்பு –** அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண். 14394/09/இ1 | 194) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 4. | இம்மாநகராட்சி தெரு விளக்கு பராமரிப்பில் துறை மூலம் 12 வார்டுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது.<br>40W குழல் விளக்குகள் – 1129<br>சோடியம் ஆவி விளக்குகள் – 197<br>எனர்ஜி சேமிப்பு விளக்குகள் – 100<br><br>அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்படி மின்சாதன பொருட்கள் ஒரு ஆண்டு கால பராமரிப்பிற்கு செலவினம் ரூ.9.00 இலட்சம் ஆகும். இதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>39 வார்டுகள் தனியார் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றது. இதன் விவரம் வருமாறு<br><br>40W குழல் விளக்குகள் – 5496<br>250W சோடியம் ஆவி விளக்குகள் – 849<br>150W மெர்க்குரி ஆவி விளக்குகள் – 74<br>உயர்மின் கோபுர விளக்குகள் – 10<br><br>மேலும் திட்டப்பணிகள் மூலமாகவும் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. இதனையும் சேர்த்து ஓராண்டு கால பராமரிப்பு தொகை ரூ.36.00 இலட்சம் ஆகும். (17.09.10 முதல் 16.09.11) இதற்கான செலவினத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1) துறை மூலம் பராமரிக்கப்பட்டு வரும் பகுதிகளுக்கான செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கும், மேல் நடவடிக்கை தொடரவும் அனுமதிக்கலாம்.<br>2) தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் பகுதிகளுக்கான செலவினம் ரூ.36.00 இலட்சத்திற்கும் அனுமதிக்கலாம்.<br>இ3/14087/10 | 195) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| | 5 | 5) தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலக பணி காரணமாக வெளியூர் பயணம் செய்வதற்காக 2010–11ம் ஆண்டிற்கு பயணத் தொகை பெறுவதற்காக உத்தேச செலவின தொகை ரூ.50000/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** உத்தேச செலவுத் தொகை ரூ.50000/–க்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி1/17132/09 | 196) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |